புதிய தலைமுறை அறக்கட்டளை

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காக பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

FORUM FOR MICRO & SMALL ENTERPRISES
(A Unit of Puthiya Thalaimurai Foundation)
சுயதொழில் மன்றம்
www.microenterprises-ptf.org

ISO 9001:2008 Certified

# "ஆடு வளர்ப்பு - அதிக வருமானம் தரும் பெரிய தொழிலாக உருவெடுத்து வருகிறது"

## சுயதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கம் - கொடைக்கானல்



கருத்தரங்கினை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர். ஜி. வள்ளி அவர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் துவக்கி வைத்த காட்சி



மேடையில் சிறப்பு விருந்தினர்கள் வீற்றிருந்த காட்சி

புதிய தலைமுறை அறக்கட்டளையின் சுயதொழில் மன்றம், சென்னை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் மற்றும் மத்திய செம்மறி ஆடு மற்றும் ரோம ஆராய்ச்சி மையம், மன்னவனூர், கொடைக்கானல் இணைந்து திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைகழகத்தில் ஒரு நாள் சுயதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கத்தினை ஜூலை 16, 2017 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்தியது.

காலை 10.00 மணி அளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. கருத்தரங்கினை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர். ஜி. வள்ளி அவர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். பின்னர் அன்னை தெரசா மகளிர் பல்கலைகழகத்தின் முதல்வர் முனைவர் சந்திரமணி ஜெபராணி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் கீதா சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியை துவக்கி வைத்து உரையாற்றிய அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர். ஜி. வள்ளி அவர்கள் பேசுகையில் கருணையின் உருவமாக, சேவையின் உறைவிடமாக இன்றளவும் புகழப் படுபவர் அன்னை தெரசா 1929-ல் கொல்கத்தா வந்த அன்னை தெரசா, அங்கு ஒரு பள்ளியில் சுமார் 17 ஆண்டுகள் பணிபுரிந்தார். 1946-ல் ஏழைகளுக்கு உதவுவதற்காக கற்பித்தல் பணியிலிருந்து விலகிய அன்னை தெரசா, சேவை செய்வதற்காக செவிலியர் பணிக்கான மருத்துவப் பயிற்சி பெற்றார். சமூகசேவை, சகிப்புத்தன்மை மூலம் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவியது என்று கூறினார். வருங்காலத்தில் மக்கள் அனைவரும் சுயதொழில் செய்து முன்னேற வேண்டும் என்றும், விவசாயத் துறையை முன்னேற்ற வேண்டும் என்றும் கூறினார்.

செம்மறி மற்றும் வெள்ளாட்டு இனங்களும் அவற்றின் சிறப்பம்சங்கள் குறித்து முனைவர் S.M.K. திருமாறன், Scientist, Animal Genetics & Breeding, மத்திய செம்மறி ஆடு மற்றும் ரோம ஆராய்ச்சி மையம், மன்னவனூர், கொடைக்கானல் அவர்கள் பேசுகையில் சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் ரெட்கிடா வகை ஆடுகள் அதிகம் வளரக் கூடியது. மந்தை ஆடும், மேச்சேரி ஆடு போன்ற இனங்கள் தர்மபுரி, சேலம் பகுதிகளில் அதிகம் உள்ளது.



S.M.K. திருமாறன், Scientist, Animal Genetics & Breeding, மத்திய செம்மறி ஆடு மற்றும் ரோம ஆராய்ச்சி மையம், மன்னவனூர், கொடைக்கானல் அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

இராமநாதபுரம் வெள்ளை ஆடுகளின் சிறப்பம்சம் அவற்றிற்கு கண், கால்களில் கருமை நிறம் வாய்ந்தது, பெட்டைக்கு கொம்பு கிடையாது. நல்ல பால் உற்பத்தி உடைய ஆடுகள் கீழ்க்காணும் பண்புகளுடன் இருக்கவேண்டும். தலை சற்று பெரியதாக, அகலமான மூக்கும், வாயும் கொண்டதாக இருக்கவேண்டும். ஆட்டின் முகத்தில் பெண்மைத் தோற்றம் நன்கு தெரியவேண்டும். கண்கள் பெரிதாக அகன்று பளிச்சென்று இருக்கவேண்டும்.





அன்னை தெரசா மகளிர் பல்கலைகழகத்தின் துணை வேந்தர் முனைவர். ஜி. வள்ளி, பதிவாளர் முனைவர் கீதா மற்றும் முதல்வர் முனைவர் சந்திரமணி ஜெபராணி ஆகியோர் சிறப்புரையாற்றிய காட்சி

வெள்ளாட்டு இனங்களின் தேர்வு குறித்து பேசுகையில் மலபாரி (டெல்லிச்சேரி) அட்டபாடி, சேனன் மலபாரி கலப்பு இனங்கள் அதிகம் காணப்படுகின்றன. வயது முதிர்ந்த ஆடுகள் வாங்கும் போது அதன் பால் உற்பத்தித் திறனை அறிந்த பின் வாங்குதல் நலம். ஒரு நாளின் உற்பத்தி அளவு என்பது அடுத்தடுத்த இரண்டு கறத்தலில் பாலின் அளவு 0.5 கிகி அதிகமாக இருப்பதாகும். இந்த அளவுக் குட்டிகள் ஊட்டியது போல மீதமுள்ள அளவாகும். இளம் ஆடுகளை வாங்கும் போது அதன் குட்டி ஈனும் உற்பத்தி அளவைப் பார்த்து வாங்குதல் வேண்டும். அதோடு ஆடு எந்த ஒரு உடல் குறைபாடும் இன்றி இருக்கவேண்டும். இனவிருத்தி செய்ய முடியாத ஆடுகளைக் கண்டறிந்து, மருத்துவரின் ஆலோசனைப்படி அகற்றிவிட வேண்டும் என்றும் கூறினார்.

பின்னர் முனைவர். ராஜேந்திரன், இணை விஞ்ஞானி, மத்திய செம்மறி ஆடு மற்றும் ரோம ஆராய்ச்சி மையம், மன்னவனூர், கொடைக்கானல் அவர்கள் பேசுகையில் மன்னவனூர் பகுதி ஆடு மேய்ப்பவர்களால் செம்மறி ஆடுகள் வளர்க்கப்பட்டு ஆண்டுக் கொருமுறை அவற்றின் உரோமம் மிக கவனத்துடன் பிரித்தெடுக்கப்பட்டு அவை தலைமை அலுவலகமான ராஜஸ்தான் அவிக்கா நகருக்கு அனுப்பப்படுகிறது. அங்கு உரோமம் இயற்கை சாயம் கொண்டு தயாரிக்கப்பட்டு பல்வேறு பயன்பாட்டிற்காக குறிப்பாக ராணுவவத்திற்கும் மக்களுக்கும் தூய கலப்படமில்லாத கம்பளி ஆடைகளாக விற்பனை செய்யப்படுகிறது.



முனைவர். ராஜேந்திரன், இணை விஞ்ஞானி, மத்திய செம்மறி ஆடு மற்றும் ரோம ஆராய்ச்சி மையம், மன்னவனூர், கொடைக்கானல் அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

இவ்வாறு தமிழக உழவர்களையும் இராணுவ வீரர்களையும் இணைக்கும் பாலமாக தென்மண்டல செம்மறி ஆடு வளர்ப்பு முறைகள் மற்றும் உரோம ஆய்வு நிலையம் செயல்படும் முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் இராமச்சந்திரன், Senior Scientist, Division of Physiology, Reproduction and Shelter Management, ICAR-CIRG, Mathura, Farah, அவர்கள் பேசுகையில் வெள்ளாடு மற்றும் அதன்வளர்ப்புமுறைகள், தொழிலில் எவ்வாறு லாபம் பெறுவது என்பதை பற்றிவிரிவாக எடுத்துரைத்தார். வெள்ளாடு வளர்ப்பு விதி முறைகளில் மிக கவனத்துடன் அதை கயிற்றில் கட்டிவளர்த்தல், மேய்ச்சல்முறை, மற்றும் தொட்டில்முறைகள் பற்றி கூறினார்.



முனைவர் இராமச்சந்திரன், Senior Scientist, Division of Physiology, Reproduction and Shelter Management, ICAR-CIRG, Mathura, Farah, அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

கன்னி ஆடு, ஜலவாதி ஆடு, பீட்டல், செஜி முதலியவை வெள்ளாடு இனங்கள் ஆகும். இந்த ஆடுகளை இறைச்சி, பால், மற்றும் ரோமம் முதலியவற்றுக்கு பயன்படுவதாக கூறினார்.

ஆடுகளை தேர்வு செய்யும்போது அதன் உடல்தன்மை, வளர்ச்சி, வயது, பிறக்கும் போது எத்தனை குட்டிகளோடு அவை பிறந்துள்ளன போன்ற தகவல்களை சேகரித்து ஆடுகளை வாங்கவேண்டும். மேலும் ஆடுவளர்ப்பிற்கு கொட்டகை அமைத்தல் மிக முக்கியமாகும். கொட்டகை அமைக்கும் முறை பற்றி விரிவான தகவல்களை கூறினார். ஆட்டிற்கு தீவனம் வழங்கும் முறைகள் தீவனத் தொட்டி அமைத்தல் தீவனமாக வழங்கும் பொருள்கள் பற்றியும் கூறினார், மேலும் ஆடுகளுக்கு மூன்று மாதம் / ஆறுமாதங்களுக்கு ஒரு முறை அதன் எடையை பரிசோதிக்க வேண்டும் என்று கூறினார்.

முனைவர் சி. சவுந்ததராஜன், Professor, Department of Veterinary Parasitology, Madras Veterinary College, Chennai பேசுகையில் ஆடு வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் களத்தில் தனது அனுபவங்கள் தொழிலில் வெற்றி பெற்றவர்களின் தொழில் அனுபவங்கள் குறித்தும்

## “மலேசியாவில் ஒரு லட்சம் ஆடுகள் வரை தேவை இருக்கிறது. ஆடுகளை ஏற்றுமதி செய்யலாம்”



முனைவர் C. சவுந்தரராஜன், Professor, Department of Veterinary Parasitology, Madras Veterinary College, அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

விரிவாக எடுத்துரைத்தார். மேலும் ஆடு வளர்ப்பு தொழிலில் வெற்றி பெற ஆடுகளை வளர்க்கும் விதம் குறித்தும், சந்தை நிலவரங்கள் குறித்தும் அறிந்து கொள்ள வேண்டும் என்பன போன்ற பல்வேறு வகையான ஆலோசனைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் எஸ். சிவசீலன், Professor & Head, Veterinary University Training & Research Centre, Dindigul பேசுகையில் ஆடுகளுக்கு ஆண்டுக்கு 4 முறை தடுப்பூசிகள் கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி அளிக்க வேண்டும். ஆறு மாதம் வரை ஆட்டுக்குட்டிகளுக்கு மாதம் ஒரு முறை குடற்புழு நீக்கம் செய்யவேண்டும். ஆறு மாதத்திற்கு பிறகு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அதாவது பருவமழைத் தொடங்குவதற்கு முன்பு ஒரு முறையும், பருவ மழையின் போது ஒரு முறையும், பருவ மழைக்குப்பின் இருமுறையும் கொடுக்கவேண்டும். என்று கூறினார். மேலும் வெள்ளாடுகளுக்கு ஏற்படு நோய்கள் மற்றும் அதனை தடுக்கும் முறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.



முனைவர் எஸ். சிவசீலன், Professor & Head, Veterinary University Training & Research Centre, Dindigul அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கிய காட்சி

ஏற்றுமதி இறக்குமதி தொழில் குறித்து இறுதியாக கே.எஸ். கமாலுதீன், நிர்வாக இயக்குனர், Bluebharath Exim Pvt. Ltd, Chennai பேசுகையில் ஏற்றுமதி சந்தை, ஏற்றுமதிக்கான ஆணைகளை பெறும் வழிமுறைகள், நிறுவனத்தை பதிவு செய்யும் வழிமுறைகள், ஏற்றுமதி ஆணைக்கான லைசென்ஸ் கடன் / வசதி குறித்த விவரங்கள், ஏற்றுமதிக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் ஒரு தொழிலை தொடங்க வேண்டுமானால் முறையான திட்டமிடல் வேண்டும் என்றும் வங்கியின் மூலம் பொருட்களுக்கான உண்டான தொகையினை பெறும் வழிமுறைகள், பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்தல், GST, குறித்த தகவல்கள், வெற்றிகரமான ஏற்றுமதியாளராக முன்னேற்றம் அடைவதற்கான வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.



கே.எஸ். கமாலுதீன், நிர்வாக இயக்குனர், Bluebharath Exim Pvt. Ltd, Chennai , அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

இக்கருத்தரங்கில் திண்டுக்கல், கொடைக்கானல், தஞ்சாவூர், சென்னை, கன்னியாகுமரி, குற்றாலம், தென்காசி, விழுப்புரம், புதுச்சேரி, மதுரை, கோயம்புத்தூர், ஊட்டி போன்ற ஊர்களிலிருது 320க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். மாலை 6.00 மணியளவில் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

### நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களில் ஒரு சிலர் அறக்கட்டளையிடம் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள்.

கொடைக்கானலில் எந்த ஒரு நிறுவனமும் இது போன்ற ஒரு சுயதொழில் கருத்தரங்கை நடத்தியது இல்லை. புதிய தலைமுறை அறக்கட்டளை தான் முதன் முதலில் சுயதொழில் கருத்தரங்கத்தினை நடத்தி உள்ளது. ஆடு வளர்ப்பு குறித்த முழுமையான தகவலக்ளை அறிந்து கொண்டேன். புதிய தலைமுறை அறக்கட்டளைக்கு நன்றி.

எஸ். கதிரேசன், நாயுடுபுரம், கொடைக்கானல்

திருப்பூரில் தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்து வரும் நான் சொந்தமாக ஏற்றுமதி இறக்குமதி தொழில் தொடங்க வேண்டும் என்ற எண்னத்துடன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன். ஏற்றுமதி இறக்குமதி குறித்த அடிப்படை தகவல்களை அறிந்து கொண்டேன். புதிய தலைமுறை அறக்கட்டளையின் முயற்சி வெற்றி பெற என்னுடைய வாழ்த்துக்கள்............... எம். மோகன்ராஜ், திருப்பூர்

## சுயதொழில் கருத்தரங்கம், கொடைக்கானல் - புகைப்படத் தொகுப்பு






















**புதிய தலைமுறை அறக்கட்டளை**
No. 24, ஜி.என்.செட்டி சாலை, தி.நகர்
சென்னை - 600 017| அலைபேசி: 8754417500 / 8754417338 / 8754417308 / 8754417320
மின்னஞ்சல்: sm@ptfindia.org | வலை: www.microenterprises-ptf.org